1975 நவம்பர் 6]

THIRU D. SANTOSHAM : Hon. Deputy Chairman, Sir, is it not a fact that Professors who are specialists and experts in particular departments are allowed to have consulting practice and it is not necessary that the expert knowledge of such persons should be made available to the public by allowing them to have consulting practice during their spare hours?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்கப் பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய மருத்துவர்களில் சிலர், நிர்வாகத் துறையில் இருக்கக்கூடிய மருத்துவர்களில் சிலர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிராக்டிஸ் செய்யக்கூடாது. Either Consultation or general practice எதுவும் செய்யக் கூடாது. பேராசிரியர்களாக உள்ளவர்கள் அல்லது Clinical professors ஆக உள்ளவர்கள் Consultation வழங்கலாம். Consultation வேறு, Practice வேறு. அவர்கள் ஆலோசனை வழங்குவதற்கு இன்றைக்கு இடமிருக்கிறது. அதை Limited practice என்று சொல்ல வேண்டும். ஆனல் பலர் நர்சிங் ஹோம் வைத்துக்கொள்ளும் அளவுக்கு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அதில் வேறு சிலருடைய பெயர்களை வைத்துக்கொண்டு, தவறுகள் செய்வது உண்மைதான். சட்டப்படி எப்படி நடவடிக்கை எடுப்பதென்பது ஆராய்வதற்குரியது.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the poor attention in many of our Government Hospitals and overcrowding there, why not we abolish the rule prohibition private practice and make it paremissible for all medical practitioners to practise privately instead of finding fault with one or two people who are doing it surreptitiously?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவ்வாறு அனுமதிக்க ஆரம்பித்தால், மருத்துவ மனைகளில் வேலையே நடக்காது.

Chatram Dispensary, Tiruvaiyaru.

@ * 64. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to staate—

(*a*) whether there is any proposal with the Government for taking over the Chatram Dispensary at Tiruvaiyaru, Thanjavur District, and running the same as a Government hospital; and

(*b*) if so, when it is expected to be implemented ?

@ *31-10-1975* ஆம் நாள் வினப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்

[1975 நவம்பர் 6

திருவையாறு சத்திரம் மருந்தகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாற்றில் உள்ள சத்திரம் மருந்தகத்தை அரசே மேற்கொண்டு அதனை அரசு மருத்துவமனையாக நடத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், இது எப்பொழுது செயல்படுத்தப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, **(அ) இல்லை.**

(இ) எழவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு மருந்தகம், சத்திரம் டிபார்ட்மெண்ட் என்ற நிர்வாகத்தினரால் நடத்தப்படுவதாகும். அங்கு கடந்த மூன்று ஆண்டுக் காலமாக மருந்து இல்லையென்று சொல்கிறார்கள். மருந்து கிடையாதென்று போர்டு எழுதி, மருத்துவ மனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வைத்திருப்பதாக மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் இதைப்பற்றி எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, அந்த வட்டாரத்தில் ஒரு லட்சம் மக்கள் இருப்பார்கள். அந்தப் பகுதியில் ஒன்றிய மருத்துவ மனை—ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது தவிர, திருவையாறு மருந்தகம் இருக்கிறது. திருவையாற்றிலிருந்து இரண்டு, மூன்று மைலில் ஒன்றியத்தின் மேற்பார்வையில் ஒரு டிஸ்பென்சரி இயங்கிக் கொண்டிருக்கிறது. இது ஒன்றியத்தினுடைய மருத்துவ மனையாக இல்லாமல், சத்திரம் டிஸ்பென்சரி என்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஒரத்தநாடு மாணவர்கள் இல்லம் போன்று, அற அடிப்படையில் இது நடைபெற்று வருகிறது. இதன் நிர்வாகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே செம்மைப்படுத்த முடியும். செம்மைப்படுத்த முடியவில்லை என்று அவர்கள் அரசுக்கு எழுதுவார்களேயானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். ஒன்றிய மருத்துவ மனைகளைப்பற்றிப் பரிசீலிக்கும் அதே கோணத்தில் இந்த மருத்துவ மனையைப்பற்றிப் பரிசீலிக்க முடியாது. 11-7-1975-ல் மருத்துவ நலத் துறை இயக்குநருக்கு இதுபற்றி ஒரு வேண்டுகோள் வந்திருப்பதாகவும், **அது**

1975 நவம்பர் 6]

ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மருத்துவ மனையின் நிலைமைகளை விளக்கி, அரசு அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

(பிற்பகல் 4-40)

திரு. ஜி. சுவாமிநாதன்: இதுபற்றி இந்த அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே பேசும்போது, தங்களாலே அதற்குப் பணம் கொடுத்து நடத்த இயலவில்லை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அரசே இதை எடுத்துக் கொள்ளலாம் என்று கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். ஆக, அதை அரசே நடத்துமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் திருவையாறு பகுதி மக்கள் அதிகமாக இருப்பதாலும், அதிக அளவில் நோயாளிகள் இருப்பதாலும், அரசு புதிதாக ஒரு மருத்துவமனையை வைக்க முயற்சி செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்படுத்திய மருத்துவமனையில் மருந்து இல்லை என்ற நிலை இருக்கும்போது, புது மருத்துவமனை ஏற்படுத்துவது என்பது கட்டிய மனைவிக்கு குழந்தை இல்லை என்று புது மனைவி தேடுவது போல் ஆகிவிடும். அதற்கு அதிகமான செலவு ஆகும். ஆகவே, தற்போது இயலாது.

Malaria

* 76. *Q.*—THIRU D. V. D'MONTE: Will the Hon. the Minister for Health be pleased to staate—

(*a*) the specific measures taken by the Health authorities to combat the resurgence of Malaria and to control the mosquito menace in Tamil Nadu; and

(*b*) the steps taken to meet the reported shortage of Anti-Malaria Drugs?

மலேரியா

திரு. டி. வி. டி' மாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டில் மீண்டும் மலேரியா பரவுவதை எதிர்த்துப் போராடவும், கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகள் யாவை?